Registered as a Newspaper பக்கங்கள் 08 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 21 05-07-94 செவ்வாய்க்கிழமை ஓசை 137

## ஆகஸ்ட் 1 முதல் இருகட்டமாக க.பொ.த. உயர்தரப் பரீட்சை

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் நடைபெற இருக்கும் க.பொ.த உயர்தரப் பரீட்சை இரு கட்டங்களாக நடைபெறும் என பரீட்சை ஆணையாளர் ஆதர் வெதமுல்ல நேற்று அறிவித்துள்ளார். இதன்படி முதல்கட்டம் முதல் 10 நாள்களுக்குரிய பாடங்கள் ஆகஸ்ட் முதலாம் திகதி முதல் 11ஆம் திகதிவரை நடைபெறும். இரண்டாம் கட்டமாக ஆகஸ்ட் 22ஆம் திகதியிலிருந்து செப்டம்பர் முதலாம் திகதிவரை 10 நாட்களுக்கு நடைபெறும் (8 ஆம் பக்கம் பார்க்க)

# இன்றுகரும்புலிகள் நாள் அனுஷ்டிப்பு எழுச்சிபூர்வமான ஏற்பாடுகள்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ தேச விடுதலைப் போராட்ட வரலாற்றில் தம்மை முழுமையாக அர்ப்பணித்து, உலகமே ஆச்சரியப்படும் விதத்தில் சாதனை படைத்த கரும்புலிகளை நினைவு கூரும் வகையிலும் அவர்களுக்கு அஞ்சலி செய்யும் வகையிலும் இன்று கரும்புலிகள் நாள் அனுஷ்டிக்கப்படவுள்ளது

எழுச்சியூட்டும் வகையில் அமைந்த வாசகங்களைத் தாங்கிய பதாகைகள் வீதிகள் தோறும் கட்டப்பட்டிருக்கின்றன. அலங்கார வளைவுகளும் அஞ்சலி செலுத்தவென கரும்புலிகளின் உருவப்படங்களை தாங்கிய பந்தல்களும் அமைக்கப்பட்டுள்ளன வீதிகள் பருசா சிவப்பு வர்ணகொடிகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளதுடன் மின் அலங்காரங்களும் செய்யப்பட்டுள்ளன, முக்கிய இடங்களில் ஒலிபெருக்கிகள் மூலம் கரும்புலிகள் பாடல்கள் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.

யாழ் குடாநாட்டின் அனைத்துப்பகுதிகளிலும் இவ்வாறான ஏற்பாடுகள் பெரியளவில் ஏற்கனவே செய்து முடிக்கப்பட்டுள்ளன

இன்றைய இத் தினத்தில் தமிழீழ தேசியக் கொடியை சகல பாடசாலைகள், பொது நிறுவனங்கள், திணைக்களங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் ஆகிய இடங்களில் காலை 8 30 மணிக்கு முறைப்படி ஏற்றிப் பேணி மலர் அஞ்சலி செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தொடர்ந்து கோட்ட ரீதியாக மாலை பொதுக் கூட்டங்களும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் வலிகாமம், வடமராட்சி. தென்மராட்சி கோட்டங்களில் நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கடற்புலிகளும் தீவகக் கோட்டமும் இணைந்து நடத்தும் பொதுக்கூட்டம் வலிகாமம் பகுதியிலும் நடைபெறவுள்ளது. இதன்போது விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் உரை நிகழ்த்துவார்கள்.

இதே வேளை அனைத்துப் பாடசாலை மாணவர்களும் இன்று தத்தமது பாடசாலைகளில் தேசியக் கொடி ஏற்றி மௌனஞ்சலி, மலரஞ்சலி செலுத்துவதோடு கரும்புலிகளின் படங்களை பாடசாலை மண்டபங்களில் திரை நீக்கம் செய்யுமாறும் சிறப்புநிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யுமாறும் கரும்புலிகள் நினைவாக அடையாளப் பட்டியை அணிந்து கொள்ளுமாறும் விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு விடுத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வீரகாவியம் படைத்த 27 கரும்புலிகளின் நினைவுதினம் இன்று மிகப் பெரிய அளவில் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படஉள்ள இந்தநினைவு நாள் நிகழ்வில் பொதுமக்கள்,

(7 ஆம் பக்கம் பார்க்க)



சரித்திர நிகழ்வாகிவிட்ட பூநகரி வெற்றிக்கு துணையாகி நின்று பலாலி இராணுவத் தளத்தினுள் ஊடுருவித் தாக்கி வீரச்சாவடைந்த கரும்புலிகள் பதின்மூவரின் உருவப்படங்களைத் தாங்கிய ஊர்தி பவனி வரும் போது பிடிக்கப்பட்ட படம்.

# கொழும்பு நகரில் பெரும் பதற்ற நிலை; வெடிகுண்டுடன் வெள்ளைவான் நடமாட்டம்

## சிறிலங்கா புலனாய்வுத்துறை தெரிவிப்பு

கொழும்பிற்கும் - யாழ்ப்பாணத்திற்கும்

# சிறிலங்கா புலனாய்வுத்துறை தெரிவிப்பு

(கொழும்பு)

கரும்புலிகள் தினத்தையொட்டி கொழும்பிலுள்ள இராணுவ நிலைகளை விடுதலைப் புலிகள் தாக்கலாம் எனக் கிடைத்துள்ள தகவல்களை அடுத்து பெரும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து பலமான பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதேசமயம், எவ்வேளையிலும் தாக்குதல் நடத்தக்கூடிய நிலையில் வெடிகுண்டு ஏற்றிய வெள்ளை நிற வான் ஒன்று கொழும்பில் நடமாடுவதாக சிறிலங்கா புலனாய்வுத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

அண்மைக் காலத்தில் சிறிலங்கா புலனாய்வுத்துறையினருக்கு கொழும்பில் பல தாக்குதல்களை நடத்த திட்டமிடப்பட்டிருப்பதாகக் கிடைத்த தகவல்களைத் தொடர்ந்தும் கொழும்பில் பெருமளவு வெடிப்பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கூறப்படுவதைத்தொடர்ந்தும்கொழும்பு நகரில் பெரும் பதற்ற நிலை தோன்றியுள்ளது.

இதே சமயம் வெடிகுண்டு பொருத்தப்பட்ட நிலையில் கொழும்பு நகரில் வான் ஒன்று நடமாடுவதாகவும் புலனாய்வுப் பகுதியினருக்குத் தகவல்கள் கிடைத்திருப்பதைத் தொடர்ந்து மேலும் பதற்ற நிலை அதிகரித்துள்ளது.

இதேசமயம் சிறிலங்கா பாதுகாப்பு படையினர் பாதுகாப்பு என்ற ரீதியில் மேற்கொள்ளும் பெரும் கெடுபிடிகளும் பதற்றத்தை மேலும் அதிகரித்துள்ளது.

இது குறித்து சிறிலங்கா புலனாய்வுத்துறையினர் தெரிவிக்கையில், வானிலுள்ள இவ் வெடிகுண்டு விடுதலைப் புலிகளினாலேயே பொருத்தப்பட்டதாகவும் இது கொழும்பிலோ அன்றி அதனை அண்டிய பகுதிகளிலோ வெடிக்க வைக்க புலிகள் திட்டமிட்

(7 ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கொழும்பு அலுவலகம் மூடப்பட்டது

## ஐ. நா. காரியாலயமும் பூட்டு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் கரும்புலிகள் தினத்தையொட்டி கொழும்பில் உள்ள விமானப் படை அதிகாரிகள் அலுவலகம் மீது தாக்குதல் நடத்தலாம் என அச்சம் காரணமாக இவ்வலுவலகம் அருகிலுள்ள இரு சர்வதேச நிறுவனங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன.

கரும்புலிகள் நினைவு தினமான இன்று ரெயிட் அவென்யூவில் உள்ள விமானப்படை அதிகாரிகள் அலுவலகம் தாக்கப்படலாம் என்ற அச்சம் காரணமாக அதன் அருகிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்க இலங்கைத் தலைமையகமும் ஐ. நா அலுவலகமும் நேற்று முன் தினம் முதல் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. தாக்குதல் நடைபெறலாம் என்ற அச்சம் காரணமாக விமானப்படை அலுவலகம் ஏற்கனவே தற்காலிமாக மூடப்பட்டுள்ளது தெரிந்ததே,

(7 ஆம் பக்கம் பார்க்க)

# விமானபடை தலைமையகம் இடம் மாற்றக் கோரிக்கை

## ஐ. நா. அபிவிருத்தி நிறுவனம் விடுத்தது

(கொழும்பு)

கொழும்பு துன்முல்ல சந்தியில் அமைந்திருக்கும் விமானப்படைத் தலைமையலுவலகத்தை விடுதலைப்புலிகள் தாக்கலாம் என்ற செய்தி வெளிவந்துள்ளமையைத் தொடர்ந்து அவ் அலுவலகத்துக்கு அண்மையில் அமைந்துள்ள சர்வதேச நிறுவனங்களும் மற்றும் அங்கு வசிப்போரும் சிறிலங்கா அரசிடம் தமது ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளன-

இவ் அமைப்புக்கள் விமானப்படைத்தளபதி ஏயர்மார்சல் ஒலிவர் ரணசிங்காவைச் சந்தித்து இவ் அலுவலகத்தை அங்கிருந்து அப்புறப்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளன-

ஐ. நா- அபிவிருத்தித்திட்ட கொழும்பு வதிவிடப்பிரதிநிதி றொபெட்இஸ்லாண்ட், நெஸ்லே நிறுவன இயக்குனர், சட்டத்தரணி லக்ஸ்மன்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## சாரணர்கள் கூடவும்

யாழ். மாவட்டசாரணர்கள் அனைவரும் சீருடையில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கூடுமாறு அதன் மாவட்ட ஆணையாளர் திரு. இ. மகேந்திரன்வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# இன்று

## படகுச்சேவை இல்லை

இன்று கரும்புலிகள் தினம் ஆகையால் கிளாலி-பூநகரி படகுச்சேவை இன்று நடைபெறமாட்டாது எனவும் நாளை புதன் கிழமையும் நாளை மறுதினம் வியாழக் கிழமையும் வழமையான நேரத்திற்கு நடைபெறும் எனவும் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.



# நல்லெண்ணம் உருவாகுமென இந்தியா கவலையாம்

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத் தேர்தலையொட்டி யாழ்ப்பாணத்திற்கும் கொழும்பிற்கும் இடையே நல்லுறவு ஏதும் ஏற்பட்டு விடும் என்பதே இந்தியாவின் கவலையாக உள்ளது என சண்டே லீடர் பத்திரிகையில் ரோகான் குணரட்ண எழுதிய விமர்சனக் கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலையொட்டி சுதந்திரக் கட்சி தயாரித்துள்ள தேர்தல் விஞ்ஞாபனம் வடக்கு-கிழக்கு தமிழர்களுக்கு பெரும் அனுகூலமாக உள்ளதாக வெளியாகும் வதந்திகளால் புதுடில்லி இலங்கைக்கான தனது உதவித்திட்டங்கள் குறித்து மீள்பரிசீலனை செய்ய முடிவுசெய்துள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வடக்கு தேர்தலுக்கு கொழும்பில் பிரசாரம்

(கொழும்பு)

வடக்கில்தேர்தலில் போட்டியிட திட்டமிட்டுள்ள தமிழ்க் குழுக்கள் சில கொழும்பில் பிரசாரங்கள் செய்து வருகின்றன. கொழும்பில் உள்ள விடுதிகளில் தங்கியுள்ள வடபகுதி வாசிகள் மத்தியிலேயே இவர்கள் சென்று தேர்தல் பிரசாரம் செய்கின்றனர்.

இடம் பெயர்ந்தவர்கள் வேறு இடங்களில் வாக்களிக்க முடியும் என தேர்தல் ஆணையகம் விடுத்த அறிவிப்பை தொடர்ந்து இப் பிரசாரம் தமிழ்க் குழுக்களால் முடுக்கி விடப்பட்டுள்ளது. உறவினர் வீடுகளில் தங்கியிருக்கும் வடபகுதி தமிழர்களிடமும் இவர்கள் வாக்கு கேட்டுச் செல்கின்றனர்.

# டி.பி. கொலை முயற்சி முறியடிக்கப் பட்டதாம்

ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவை கொலை செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த முயற்சி முறியடிக்கப்பட்டு விட்டதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் கூறியுள்ளன

டி.பி. விஜேதுங்கா, கிரகரி வீதியில் உள்ள குற்றப் புலனாய்வு தலைமையகம், இராணுவத் தலைமையகம் ஆகியவற்றை கிளைமோர் கண்ணிவெடிகள் மூலம் ஜூன் 25-ல் தகர்க்க முயற்சிகள் மேற்கொண்டிருந்த போதிலும், இக் கிளைமோர்கள் கொண்ட வாகனம் ஒன்று கடந்த வெள்ளியன்று கண்டு பிடிக்கப்பட்டதையடுத்து இத் திட்டத்தை முறியடித்து விட்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளன.

# கரும்புலிகள் ஊர்தி இன்று வடமராட்சியில்

(யாழ்ப்பாணம்)

பூநகரி முகாம் தகர்ப்பு வெற்றிக்கு உறுதுணையாக நின்று பலாலி கூட்டு முகாம் பகுதியில் வீரச்சாவடைந்த பதின்மூன்று கரும்புலிகளின் உருவப்படங்களையும் தாங்கிய ஊர்தியின் ஊர்வலம் இன்று வடமராட்சியில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு உரும்பராய் சந்தியிலிருந்து புறப்படும் ஊர்தி கோப்பாய் சந்தியை அடைந்து அங்கிருந்து பருத்தித்துறை வீதியூடாக

(7ஆம் பக்கம் பார்க்க)

## ஆகஸ்ட் 7 இல் புலமைப் பரிசில்

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் ஏழாம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## இலவச போக்குவரத்து

(யாழ்ப்பாணம்)

கரும்புலிகள் நாள் நிகழ்வுகள் இன்று யாழ். குடாநாடெங்கும் கோட்ட ரீதியாக நடைபெறவுள்ளது.

இதன்போது சிற்றூர்தி சங்கங்களின் இணையம் கோட்ட ரீதியாக நடைபெறும் கூட்டங்களுக்கு இலவச போக்குவரத்து சேவையை நடாத்தவுள்ளது. இவை கூட்டங்களுக்கு செல்லும் மக்களின் வசதி கருதி தமது சேவையை இலவசமாக மேற்கொள்ள விருப்பது குறிப்பிடத்தக்கது.

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.



## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

இளம்சிவப்பு நிறமணிப்பை ஒன்றுடன் அடையாள அட்டையும்இல-415861028Vநல்லூர் சட்டநாதர் கோவிலுக்கும் கனகரத்தினம் ம.ம.வித்தியாலயத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 9/6 A,மலர்மகள் வீதி,அரியாலை விலாசத்தில் ஒப்படைக்கவும்.

(8721)

### தேவை

புரியாணி வகைகள் மற்றும் நூடில்ஸ், சுவீற்ஸ் வகைகள் தயாரிப்பதில் அனுபவமுள்ளவர்கள் நேரில் வரவும். சம்பளம் திறமைக் கேற்ப வழங்கப்படும். ஹொட்டல் றொலெக்ஸ், 340 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம், [8719]

### மகாதேவா ஜோதிடம்

குறிப்பு, வீடு, கைபார்த்தல், குறிப்பு எழுதுதல், அதிர்ஷ்ட எண் மாற்றம் ஆகியவற்றுக்கு ஜோதிடரைத் தினசரி 140, செல்லர் வீதி, கள்ளியங்காட்டுச் சந்தைக்கருகாமையில் சந்திக்கலாம். (8717)

### திருத்திக் கொடுக்கப்படும்

சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் குறைந்த செலவில் திருத்திக் கொடுக்கப்படும் உதிரிப்பாகங்களுக்காக மணிக்கூடுகள் வாங்கப்படும். சகலவிதமான மணிக்கூட்டு பற்றறிகளும், உதிரிப்பாகங்களும் விற்கப்படும். கஜன்ஸ் வாச்வேக்ஸ் '12 புகையிரத நிலைய வீதி' சுன்ணாகம் சந்திக்கருகாமையில்.

(8670)

### இறைச்சிக் கோழி

முழு நிறையுள்ள இறைச்சிச் சேவல்கள், விறாத்துக் குஞ்சுகள் விற்பனையாகிறது. எமது நல்லின முட்டைகளை அடைவைத்துக் குஞ்சாகத் தரக்கூடியவர்கள் தேவை கலையரங்க அருகாமை உரும்பராய் சந்தி. (8716)

### விபத்தில் பலி

---

## கரும்புலிகள் நினைவாக

நேற்றுவரையங்கு பூத்திருந்தீர் - பெரும்
நெருப்பெனப் போகவா காத்திருந்தீர்
போற்றியே பாடிட மொழிகளில்லை - கரும்
புலிகளின் நினைவுகள் அழிவதில்லை.

## ஜென்சி மியூசிக் சென்ரர்

இசைப் பதிவுக் கென்றே இன்றைய
இணையில்லா நிறுவனம்

நீங்கள் விரும்பும் எந்தப்பாடல்களாக இருந்தாலும் கொம்பக் டிஸ்க் மூலம் அனுபவமிக்க வல்லுநர்களைக் கொண்டு உடனுக்குடன் பதிவு செய்திட

நீங்கள் நாடவேண்டிய இடம்

### ஜென்சி மியூசிக் சென்ரர்

இல. 17. பழைய பஸ் நிலையம்
யாழ்ப்பாணம்

(கி-9749)

---

## கரும்புலிகள் நினைவு உருவப்படம்

### திரை நீக்கும் வைபவம்

யாழ்ப்பாணம் சிலன் தெருச் சந்தியில் (முலவைச் சந்தி) அமைக்கப்பட்ட கரும்புலிகளின் உருவப்படம் 05-07-94 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணிக்கு திரைநீக்கம் செய்து கரும்புலிகளின் நினைவுரைகளும் நடைபெறும். அனைத்து வணிகப் பெருமக்கள், ஊழியர்களும், பொதுமக்களும் மேற்படி நிகழ்வில் வருகை தந்து நிகழ்ச்சிகளை சிறப்பிக்குமாறு கழகத்தின் சார்பில் அன்புடன் அழைக்கிறோம்.

### நிகழ்ச்சி நிரல்

01. ஈகச்சுடர் ஏற்றல்
02. தேசியக்கொடி ஏற்றல்
03. மௌன அஞ்சலி
04. கரும்புலிகள் நினைவுச் சொற்பொழிவு
05. நன்றியுரை

**யாழ் வணிகர் கழகம்**
21, மேல்மாடி, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.

(சி-9732)

---

## கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில்

### குருக்கள் தேவை

மேற்படி திருக்கோயிலுக்கு நித்திய,நைமித்திய பூசைக்கு குருக்கள் தேவை. மற்றைய விபரங்களுக்கு பரிபாலன சபையுடன் தொடர்பு கொள்ளவும்.

இங்ஙனம்
பரிபாலன சபை

(8720)

---

உ
சிவமயம்

கோண்டாவில் - வடக்கு

## அருள்மிகு ஸ்ரீ சிவபூதவராய சுவாமி தேவஸ்தானம்

## வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம்

அருள்மிகு ஸ்ரீ சிவபூதவராய சுவாமிக்கு ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் பவ வருஷம் இன்று ஆனித் திங்கள் 21-ம் நாள் (5-7-1994) செவ்வாய்க்கிழமை வருடாந்த மஹோற்சவ (கொடியேற்றம்) வைபவம் ஆரம்பமாகி 10 தினங்கள் விசேஷமாக நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

### முக்கிய நிகழ்ச்சிகள்

ஆனி மீ 21-ம் நாள் (05 7-94) செவ்வாய்க்கிழமை கொடியேற்றம்
பகல் 12 மணி
„ 25 „ (09-7-94) சனிக்கிழமை பஞ்சவாகனத் திருவிழா
„ 28 „ (12-7 94) செவ்வாய்க்கிழமை சப்பரத் திருவிழா
„ 29 „ (13-7-94) புதன்கிழமை இரதோற்சவம்
காலை 10 மணி
„ 30 „ (14-7-94) வியாழக்கிழமை தீர்த்தோற்சவம்
காலை 10 மணி
கொடியிறக்கம் மாலை 5 மணி
„ 32 „ (16-7-94) சனிக்கிழமை பூங்காவனம் மாலை 5 மணி
விசேஷ நிகழ்ச்சிகள் இடம்பெறும்.
ஆடி மீ 3-ம் நாள் (19-7-94) செவ்வாய்க்கிழமை வைரவர் மடை
மாலை 4 மணி

மஹோற்சவ சிவாச்சாரியார்: கிரியாஜோதி சிவஸ்ரீ ஞானசம்பந்த ஜோதிநாதக் குருக்கள்

5-7-94— 14-7 94 வரை தினமும் இரவு 8.00 மணி தொடக்கம் 9.15 மணி வரை 'சிவநெறித் தொண்டன்' திரு. செ. சத்தியமூர்த்தி ஆசிரியர் (JP) அவர்கள் ★ மஹாபாரதம் ★ என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றுவார்கள்

அனைத்து விழாக்களும் சிறப்புற வாழ்த்துவோர்:

### குணம் வீடியோ சென்ரர்

இல. 42, மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்.

(சி-9747)

---

## POSTPONEMENT OF EXAMINATION DIPLOMA IN PUBLIC ADMINISTRATION

Due to unavoidable circumstances the Post-Graduate Diploma examination in public Administration fixed for 5th July, 1994 has been postponed. New date of the examination will be announced later.

Registrar

(சி-9746)

---

## நினைவு கூருகின்றோம்...

### 05. 07. 1994

1987-ம் ஆண்டு இதே தினத்தில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நிலை கொண்டிருந்த சிறிலங்கா இராணுவமுகாம் தகர்ப்பின்போது கரும்புலித் தாக்குதலை மேற்கொண்டு வீரச்சாவெய்திய,

**கரும்புலி கப்டன் மில்லர்** (வல்லிபுரம் வசந்தன் தாமரைக்குளத்தடி, துன்னாலை தெற்கு, சரவெட்டி-யாழ்)

இதே முகாம் தகர்ப்பின் போது வீரச்சாவெய்திய,

**வின்சன்** (சரவணமுத்து சரவணபவன்-நாவலர்வீதி, பட்டிப்புலவு, நெடுங்கேணி-மணலாறு)

**மேஜர் கமல்** (துரைரத்தினம் பரமேஸ்வரராசா-வல்வெட்டித்துறை)

இதேதினம் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்த்தம்பதிகள்,

1989-ம் ஆண்டு தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டில் வீரச்சாவெய்திய,

★ **ரகு** (பத்தக்குட்டி மனோகரன்-மணற்சேனை, மூதூர்-திருமலை)

மட்டு-ஏறாவூர்ப் பகுதியில் தேசவிரோதசக்திகளினால் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்ட. மட்டு நகர்ப் பிரதேசப் படைத்துறை ஆணையாளர்,

★ **கஜன்** (மார்க்கண்டு ரீஷாகரன்-அன்புவழிபுரம்-திருமலை)

★ **முருகன்** (கைலாசபதி அன்பழகன்-சிவரஞ்சனி வீதி, நாயன்மார்கட்டு-யாழ்ப்பாணம்)

யாழ்-மல்லாகத்தில் தேசவிரோதசக்திகளினால் கடத்திச்சென்று கொலை செய்யப்பட்டு எமைப்பிரிந்த

★ **யோசப்** (யோண்பிள்ளை யோசப் - அளவெட்டி-யாழ்)

★ **ஜோண்சன்** (குசேதாசன்ஜோண்சன்-தைபிட்டி, காங்கேசன்துறை-யாழ்)

★ **சந்திரன்** (-சந்திரவதனன்-பருத்தித்துறை)

1990-ம் ஆண்டு அம்பாறை-கஞ்சிகுடியாறுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின் போது வீரச்சாவெய்திய,

**சுந்தர்** (- - தம்பிலுவில் அம்பாறை)

பராய் சந்தி. (8716)

## விபத்தில் பலி

(யாழ்ப்பாணம்)

நேற்று முன் தினம் அதிகாலை நுணாவில் பகுதியில் சைக்கில் ஒன்றும் லொறி ஒன்றும் விபத்திற்குள்ளான தினால் சைக்கிளில் சென்ற ஒருவர் பலியானார் மற்றவர் படுகாயமடைந்தார்.

உரும்பராயைச் சேர்ந்த ஏ. சுகந்தன் (வயது 19) தம்பு அன்னலிங்கம் (வயது 47) ஆகிய மகனும் தந்தையுமே சைக்கிளில் சென்ற சமயம் தந்தையாகிய சம்பு அன்னலிங்கம் பலியானார். (பா, நி)

## உலர் உணவு விநியோகம்

தற்போது இடம் பெயர்ந்தோருக்கான வைகாசி மாத இருவார இலவச உலர் உணவு அரிசி, சீனி, பருப்பு, பயறு. நற்சீரகம், சோம்பு, பூடு, நூடில்ஸ், மீன்ரின், லக்ஸ்பிறே பால்மா ஆகியன இம்முறை சகல பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைகளின் மூலமும் வழங்கப்பட்டு வருகின்றது.

## வீதிவிளக்குகள் திருட்டு

கண்டுக்குழி பழைய பூங்கா வீதி குளத்துக்குச் சமீபமாக இருந்த யாழ் மாநகரசபைக்கு சொந்தமான வீதிவிளக்கு ஒன்றின்பக்கக் கண்ணாடியைச்சில விஷமிகள் கடந்த வாரம் உடைத்து அதற்குள் இருந்த விளக்கை இரவில் களவாடிச் சென்றுள்ளதாக இப்பகுதி மக்கள் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளனர். (24)

## புது முகங்கள் போட்டியிடும

(கொழும்பு)

நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தல் தொடர்பாக பலபுதுமுகங்கள் அக்கட்சியின் சார்பில் போட்டியிட இருப்பதாக பொது ஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் தி. மு. ஜயரட்ண தெரிவித்துள்ளார்.

குணம் வீடியோ சென்ரர்
இல. 42, மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்.
(சி-9747)

(சி-9746)

# கரும்புலிகள் நினைவாக....

இருக்கும் வரையில் காற்றெனவே
இலேசாகத் தானிருந்தார்!
புறப்பட்ட போதோ புயலின்
மையத்தை பிரசவிக்கச் செய்தார்!!

**யாழ் மர்வட்ட நகைத் தொழிலாளர் சங்கம்**
**கன்னாதிட்டி வீதி யாழ்ப்பாணம்.**

அன்பளிப்பு

**த. விக்னேஸ்வரன்**
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

**E. S. K.**
**நகைத்தொழிலகம்**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-9748)

சமரின் போது வீரச்சாவெய்திய,

**சுந்தர்** (- - தம்பிலுவில் அம்பாறை)

**ரமணன்** (சோமசுந்தரம் திருச்செல்வம்-காரைதீவு-அம்பாறை)

**கஜமோகன்** (- - கண்ணகிபுரம்-அம்பாறை)

பலாலியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**கப்டன் பிரதீப்** (சுப்பிரமணியம் சதானந்தராசா-கொக்குத்தொடுவாய்-மணலாறு)

திருமலை- பன்குளம், 10-ம் கட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**கப்டன் திலகன்** (வீரசிங்கம் திலகரட்ணம்-தம்பலகமம் - திருமலை)

ஆனையிறவில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட கண்ணிவெடி விபத்தில் எமைப்பிரிந்த,

**திலீப்** (கந்தசாமி கண்ணன்- கல்லுப்பிட்டி, கண்டாவளை - கிளிநொச்சி)

அம்பாறை - கோமாரி இடம்பெயர்ந்தோர் முகாமில் வைத்துச் சிறிலங்கா ராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போன பொத்துவிலைச் சேர்ந்த 02 தமிழர்கள்.

திருமலை-மூதூர், வெருகல், முகத்துவாரம், ஈச்சிலம்பத்தைப் பகுதிகளில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதல்களில் கொல்லப்பட்ட 38 தமிழர்கள். கந்தளாய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் முஸ்லிம் ஊர்காவற்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 24 தமிழர்கள்.

பச்சனூர்ப் பகுதியில் தேவாலயம் மீது சிறிலங்கா வான் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 04 தமிழர்கள்.

இதே தினம் சிறிலங்காக் கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ச் சிறுவன்.

1992ஆம் ஆண்டு புல்லாவெளியில் சிறிலங்கா இராணுவத்தினரின் உலங்குவானூர்தித் தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப்.தமிழினியன்-யக்சன்** (எதிர்மன்னசிங்கம் ஆனந்தவேல் - சுழிபுரம் வடக்கு - யாழ்)

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்.**

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்கள்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்.**

(சி-9736)

# மனித தியாகத்தின் இமயத்தை தொட்ட கரும்புலிகள்; விடுதலைப் போருக்கு புதிய பரிமாணம் தந்தவர்கள்

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு, இன்றைய தினத்தில், முழு இலங்கைத் தீவையும் அதிரவைத்த ஒரு சம்பவம் நிகழ்ந்தது. எமது விடுதலை இயக்கத்தின் முதலாவது கரும்புலி வீரன் கப்டன் மில்லர், ஓர் ஒப்பற்ற சாதனையை நிலை நாட்டினான். எமது விடுதலை வரலாற்றில் என்றுமே நிகழாத ஓர் அதிசயம் அன்று நிகழ்ந்தது. எதிரியின் அசைக்க முடியாத கோட்டையாகத் திகழ்ந்த ஓர் இராணுவ முகாமை இந்த இளம்புலி வீரன், தனித்த ஒருவனாகச் சென்று தகர்த்தெறிந்தான். ஒரு பெரிய படையணியாலும் செய்ய முடியாத பாரிய இராணுவ சாதனையை ஒரு தனி மனிதனாகச் சென்று இவன் சாதித்து முடித்தான். எரிமலையைச் சுமந்து சென்று எதிரியின் பாசறைக்குள் வெடிக்க வைத்தான்.

இந்த பூகம்பமான தாக்குதல் நிகழ்வு அன்றைய வரலாற்றுச் சூழ்நிலையையே மாற்றியமைத்தது எதிரியின் சைனியங்கள் நிலைகுலைந்து பின்வாங்கின. ஒரு பெரிய படையெடுப்பின் பேரழிவிலிருந்து யாழ்ப்பாணம் தப்பிக்கொண்டது தனி மனிதனாக, எமது போராளி ஒருவன், தன்னை அழித்து தனது தேசத்தை பேரழிவிலிருந்து காப்பாற்றினான்.

முதன்முதலாக, எமது போராட்ட வரலாறு, தியாகத்தின் அதியுன்னதமான ஒரு அற்புதத்தைப் பதிவு செய்து கொண்டது. அன்றிலிருந்து எமது போராட்ட மரபில் ஒரு புதிய அத்தியாயம் திறக்கப் பட்டது. என்றுமில்லாத வகையில் ஒரு புதிய போர் வடிவம்அறிமுகப் படுத்தப்பட்டது.

கப்டன் மில்லருடன் கரும்புலிகளின் சகாப்தம் ஆரம்பமாகியது. என்றுமே உலகம் கண்டிராத, எண்ணிப் பார்க்கவும் முடியாத தியாகப் படையணி ஒன்று தமிழீழத்தில் உதயமாகியது.

கரும்புலி வீரர்களின் தோற்றமும், தற்கொடைப் படையாக அவர்களின் வளர்ச்சியும், எழுச்சியும் மிகவும் நுட்பமான அவர்களின் போர்ச் சாதனைகளும் எமது போராட்டத்தின் ஒரு வரலாற்றுத் தேவையாகவே எழுந்தது.

நாம் இன அழிவை எதிர்கொள்ளும் ஒரு சிறிய தேசிய சமுதாயம். எமக்குக் குரல் கொடுக்கவோ, கை கொடுக்கவோ உலகில் எவரும் இல்லை. நாம் தனித்து நிற்கின்றோம். எமது சொந்தக் கால்களில் நிலைத்து நிற்கின்றோம். பலம் வாய்ந்த எதிரிகள்

**கரும்புலிகள் நாளையொட்டி, சென்ற ஆண்டு, தமிழீழ விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் பிரிவின் கரும்புலி வீரர்கள் மத்தியில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் ஆற்றிய உரையை இங்கு தருகிறோம்.**

எம்மைச் சூழ்ந்து நிற்கிறார்கள். எம்மை ஒழித்துக் கட்ட உறுதி பூண்டு நிற்கிறார்கள். முழு உலகமுமே ஒன்று திரண்டு எமது எதிரிகளுக்கு முண்டு கொடுத்து

வாய்ந்த ஆயுதமாகவே, கரும்புலிகளை நான் உருவாக்கினேன். கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள், எமது போராட்டப் பாதையின் தடைநீக்கிகள். எதிரியின் படை பலத்தை மனபலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள்.

கரும்புலிகள் வித்தியாசமானவர்கள்; அபூர்வமான பிறவிகள். இரும்பு போன்ற உறுதியும், பஞ்சு போன்ற நெஞ்சமும் கொண்டவர்கள். தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தைக் காணும் ஆழமான மக்கள் நேயம் படைத்தவர்கள்.

பயம் என்பது பலவீனத்தின் வெளிப்பாடு. கோழைத்தனத்தின் தோழன். உறுதிக்கு எதிரி. மனித பயங்களுக்கு எல்லாம் மூலமானது மரணபயம். இந்த மரணபயத்தைக் கொன்று விடுபவன்தான் தன்னை வென்று விடுகின்றான். அவன்தான் தனது மனச் சிறையிலிருந்து விடுதலை பெறுகிறான்.

கரும்புலிகள்பயத்தின் வேர்களைப் பிடுங்கி எறிந்தவர்கள். சாவு அவர்களிடம் சரணடைந்துவிடுகின்றது. மரணத்தின் நாளைஅவர்கள் எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். சாவு பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை.



இந்த உலகில் வாழும் மனிதன் ஒவ்வொருவனும் எல்லாவற்றுக்கும் மேலாக தன்னையே காதலிக்கின்றான். தனது உயிரையே நேசிக்கின்றான். உயிர் வாழ வேண்டும் என்று துடிக்கிறான். மனிதன் உயிரை நேசிப்பதால், உயிர்வாழ விரும்புவதால், உயிர் அற்றுப் போகும் சாவு என்ற இல்லாமை நிலைக்குப் பயப்படுகிறான். இது மனிதஇயல்பு. இயற்கையின் நியதி.

ஆனால், ஒரு கரும்புலி வீரன் தன்னை விட தனது இலட்சியத்தையே காதலிக்கிறான். தனது உயிரைவிட தான் வரித்துக் கொண்ட குறிக்கோளையே நேசிக்கிறான். அந்தக் குறிக்கோளை அடைவதற்கு தன்னை அழிக்கவும் அவன் தயாராக இருக்கின்றான். அந்தக் குறிக்கோள் அவனது சுயத்திற்கு அப்பால் நிற்கும் மற்றவர்களின் நலன் பற்றியது; நல்வாழ்வு பற்றியது; மற்றவர்கள் இன்புற்று இருக்க வேண்டும் என்பதற்காக தன்னை இல்லாதொழிக்கத் துணிவது, தெய்வீகத் துறவறம். அந்தத் தெய்வீகப் பிறவிகள் தான் கரும்புலிகள்.

தேசிய விடுதலை என்ற உயரிய இலட்சியத்தைத்

தம்மை அழிக்கும் அந்த இறுதிக் கணத்திலும் தமது இலக்கை அழிக்கும் நோக்கிலேயே அவர்கள் கண்ணும் கருத்துமாக இருப்பர். இலட்சிய உறுதியில் அவர்கள் இரும்பு மனிதர்கள்.

'கரும்புலி' என்ற சொற்பதத்தில் கருமையை மனோதிடத்திற்கும், உறுதிப்பாட்டிற்குமே நாம் குறிப்பிடுகின்றோம். இன்னொரு அர்த்த பரிமாணத்தில் இருளையும் அது குறியீடு செய்யும். பார்வைக்குப் புலப்படாத, பூடகமான, இரகசியமான தன்மையையும், செயற்பாட்டையும் அது குறித்து நிற்கும். எனவே 'கரும்புலி' என்ற சொல் பல அர்த்தங்களைக் குறிக்கும் ஆழமான படிமமாக அமையப் பெற்றிருக்கின்றது.

இந்த இரகசியத் தன்மை கரும்புலிகளின் செயற்பாட்டு வெற்றிக்கு மூலாதாரமானது ஆளுக்கும் பெயருக்கும்அப்பால்அந்த தனிமனித' தனித்துவத்திற்கு அப்பால் செயற்பாடே இங்கு முதன்மை பெறுகின்றது, மனிதர்களின் இருப்பை விட மனிதர்களின்

காற்றுடன் கலந்துவிட்ட இந்த சரித்திர நாயகர்களை நான் சிரம்தாழ்த்தி வணங்குகிறேன்.

மனித தியாகத்தின் இமயத்தைத் தொட்டுவிட்ட இந்த இனிமையானவர்களை நான் அறிவேன். அவர்களது நெஞ்சத்தின் பசுமையில் ஊற்றெடுத்த உணர்வுகளையும் நான் புரிவேன். ஏதோ ஒன்று மனித விடிவை நோக்கி நகரும் உந்து சக்தியாக அவர்களை ஆட்கொண்டிருந்து, அந்த விடுதலையின் தாகத்தைத் தீர்க்க எதையும் செய்வதற்கு அவர்கள் தயாராக இருந்தார்கள். அவர்களை அரவணைத்து விடையளிக்கும் போது இனம் புரியாத உணர்வுகளால் எனது ஆன்மா நடுங்கும்.

ஒரு புனித யாத்திரையில் அவர்கள் போனார்கள். கண்ணீர் வடித்து நிற்கும் எமது மக்களுக்கு ஒரு புதிய வாழ்வு பிறக்கும் என்ற அசையாத நம்பிக்கையில் அந்தத் தியாகப் பயணத்தைத் தொடர்ந்தார்கள். அந்தப் புனிதர்களை எண்ணும் பொழுது எல்லாம் எனது நெஞ்சு புல்லரிக்கும்.

கரும்புலி வீரர்கள் பற்றி இன்று முழு உலகமும் பேசுகிறது. அவர்களது மகத்தான தியாகத்தைக் கண்டு மலைத்துப் போய் நிற்கிறது. பூகம்ப அதிர்வாக குமுறும் எமது போராட்டத்தின் உக்கிரத்தை உலக சமுதாயத்திற்கு உணர்த்தியவர்கள் கரும்புலிகளே

அன்றொரு காலம் அமைதி வழியில் உரிமை கேட்டு ஆர்ப்பரித்த தமிழினத்தை அடக்கு முறையாளனின் இரும்புக் கரங்கள் நசுக்கி விட்டன. இன்று நீதி கேட்டு நெருப்பாக எரியும் தமிழரின் ஆவேச எழுச்சியை எந்தச் சக்திகளாலும் நசுக்கிவிட முடியாது.

இது கரும்புலிகளின் சகாப்தம்.

இது கரும்புலிகளின் சகாப்தம். இடியும் மின்னலுமாக புலிகள் போர்க் கோலம் கொண்டுவிட்ட காலம். இந்த புதிய யுகத்தில் எமது போராட்டம் புதிய பரிமாணங்களில்விரியும். சாவுக்கு விலங்கிட்ட மறவர்கள், புதிய சரித்திரம் படைப்பவர்கள். எமது சந்ததியின் விடிவுக்கு விளக்கேற்றி வைப்பார்கள். கரும்புலிகளின் புனித தினமாகிய இன்றைய நாளில், வரைபடாத சித்திரங்களாகவும், எழுதப்படாத சரித்திரங்களாகவும் எமது வாழ்வுக்காக தமது வாழ்வைத் துறந்த அந்த அற்புதமான தியாகிகளை எமதுநெஞ்சில் நிறுத்திப்பூசிப்போமாக.

இடியும் மின்னலுமாக புலிகள் போர்க்கோலம் கொண்டுவிட்ட காலம்.

பெயருக்கும் அப்பால் அந்த தனிமனித தனித்துவத்திற்கு

எம்மைச் சூழ்ந்து நிற்கிறார்கள். எம்மை ஒழித்துக் சட்ட உறுதி பூண்டு நிற்கிறார்கள். முழு உலகமுமே ஒன்று திரண்டு எமது எதிரிகளுக்கு முண்டு கொடுத்து வருகிறது. இந்த இக்கட்டான ஆபத்தான சூழ்நிலையில் நிர்க்கதியாக நிற்கும் ஒரு மக்கள் சமூகம் என்ற ரீதியில் நாம் எம்மாலான சகல வழிகளையும் கையாண்டு, எமது சக்திகள் அனைத்தையும் பிரயோகித்து, ஒரு தற்காப்புப் போரை நிகழ்த்த வேண்டும். இந்த தேவையை, நிர்ப்பந்தத்தை நாம் அசட்டை செய்ய முடியாது. அல்லாத பட்சத்தில், நாம் இனவாரியாக அழிந்து போவதைத் தவிர்க்கவே முடியாது.

பலவீனமான எமது மக்களின் மிகவும் பலம் கப் பிறவிகள் தான் கரும்புலிகள்.

தேசிய விடுதலை என்ற உயரிய இலட்சியத்தைத் தழுவிக்கொள்ளும் ஒவ்வொருவனும் முதலில் தன்னை விடுதலை செய்து கொள்ள வேண்டும். தனது மனவுலக ஆசைகளிலிருந்தும், அச்சங்களிலிருந்தும் தன்னை விடுதலை செய்து கொள்பவன்தான் உண்மையில் விடுதலை வீரன் என்ற தகைமையைப் பெற முடியும். மனமானது பயங்களிலிருந்து விடுதலை பெறும் போதுதான் வீரம் தோன்றுகிறது. துணிவு பிறக்கிறது. இந்த மனவியல் உண்மையை நான் ஆரம்பத்திலிருந்தே எமது போராளிகளுக்கு எடுத்துரைத்து வருகிறேன்.

அப்பால் செயற்பாடே இங்கு முதன்மை பெறுகின்றது, மனிதர்களின் இருப்பை விட மனிதர்களின் செயற்பாடே ஒரு போராட்ட வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகின்றது. பல கரும்புலி வீரர்கள் இன்று பெயர் குறிப்பிடாத கல்லறைகளில் அனாமதேயமாக உறங்கிய போதும் அவர்களது அற்புதமான சாதனைகள் வரலாற்றுக் காவியங்களாக என்றும் அழியாப் புகழ் பெற்று வாழும்.

முகத்தை மறைத்து, பெயரையும் புகழையும் வெறுத்து இலட்சிய மூச்சாக தமிழீழ விடுதலைக் கிடியும் மின்னலுமாக புலிகள் போர்க்கோலம் கொண்டுவிட்ட காலம்.

இந்தப் புதிய யுகத்தில் எமது போராட்டம் புதிய பரிமாணங்களில் விரியும். சாவுக்கு விலங்கிட்ட மறவர்கள் புதிய சரித்திரம் படைப்பார்கள். எமது சந்ததியின் விடிவுக்கு விளக்கேற்றி வைப்பார்கள்.

கரும்புலிகளின் புனித தினமாகிய இன்றைய நாளில், வரைபடாத சித்திரங்களாகவும், எழுதப்படாத சரித்திரங்களாகவும், எமது வாழ்வுக்காகத் தமது வாழ்வைத் துறந்த அந்த அற்புதமான தியாகிகளை எமது நெஞ்சில் நிறுத்திப் பூசிப்போமாக.

# தமிழ் தேசிய இனத்தின் விடுதலைப் போரில்

# உந்து விசையாக நிற்கும் கரும்புலிகள்

"கரும்புலிகள்'' என்ற வார்த்தைப் பிரயோகம் உலகளாவிய ரீதியில் ஒவ்வொருவராலும் பேசப்படும் சக்தி மிக்கதொரு சொற்பதமாகி விட்டது.

கரும்புலித் தாக்குதலை நடாத்தும் விடுதலைப்புலி உறுப்பினர்களின் பிரமிப்பூட்டும் தியாகங்கள் உலக சமுதாயத்தை அதிர்ச்சியிலும், வியப்பிலும் ஆழ்த்தி வருகின்றன.

மனிதன் பிறந்ததே வாழ்வதற்காகத்தான். அப்படியானால் இறப்பதற்காகவே களம் புகும் இக் கரும்புலிகள் யார்?

இவர்களது உருவாக்கத்தின் வரலாற்றுப் பின்னணி என்ன?

ஈடு இணையற்ற இவர்களது ஈகமும், மன ஓர்மமும் சமுதாயத்தில் ஏற்படுத்தும் தாக்கம் எத்தகையது என்பன போன்ற கேள்விகளுக்கான விடைகளானது மானிட ஆய்வாளர்கள் மத்தியில் ஆராய்ச்சிக்குரியனவாகி விட்டன.

இன்று உலகெங்குமுள்ள அடக்குமுறையாளர்கள் தங்களுக்குள் கைகோர்த்தபடி, சுதந்திரக் காற்றை சுவாசிக்க விழையும் மக்களை மிருகத்தனமாக அடக்கி ஒடுக்க முனைகின்றனர்.

இவர்களிடம் ஆள் - ஆயுத பலம் உண்டு.

ஆட்சி அதிகாரம் உண்டு. தொழில்நுட்ப வலுவுண்டு. இவற்றைத் தேவைப்படும் இடங்களுக்கு தேவைப்படும் நேரத்தில் கொடுத்து மாறி, போராட்ட சக்திகளை பலம் இழக்கச் செய்து, தங்களது அடக்குமுறைகளை வலுப்படுத்துகின்றனர்.

இந்த நவீன அடக்குமுறையாளர்களுக்கு ஈடுகொடுக்கக் கூடிய அளவிற்கு ஆள்-ஆயுத-தொழில்நுட்பத் திறன்களை போராட்ட சக்திகள் கொண்டிருப்பதில்லை.

மிகக் குறைந்த அளவில் இவர்களுக்கு இருக்கும் போராட்டத் திறன்களில் இருந்து மிக உச்சப் பயன்களை பெற்றாலொழிய, போராட்டச் சக்கரத்தை ஓர் எல்லைக்கு அப்பால் நகர்த்த முடியாது.

எனவே ஒடுக்குமுறையாளர்களின் நாடியை ஒடுங்கச் செய்யும் அளவிற்கு பல்வேறு திசைகளிலிருந்தும் வெவ்வேறு வடிவங்களில் போர்ச் சக்கரம் நகர்த்தப்பட வேண்டும். இந்தப் போர் வடிவங்களுக்குள்ளேயே உயர்ந்ததும், உன்னதமானதுமான புலிகளின் போர் வடிவம் தான் கரும்புலித் தாக்குதலாகும்.

தன்னை இழந்து எதிரிகளில் பலரை அல்லது எதிரியின் பலமிக்கதொரு இலக்கை அழிக்கக் கூடியதொரு படையணி ஒன்றைத் தலைவர் பிரபாகரன் அவர்கள் ஆரம்பத்திலிருந்தே கொண்டுள்ளார்.

அந்த எண்ணக் கருவைச் செயற்படுத்தக் கூடிய ஆற்றலை புலிவீரர் மத்தியில் சிறுகச் சிறுக ஏற்படுத்திக் கொண்டு வந்தார்.

1981ஆம் ஆண்டு திரு. தங்கத்துரை, குட்டிமணி போன்றோர் சிங்கள இராணுவத்தால் கைது செய்யப்பட்டு கொழும்பில் வைக்கப்பட்டிருந்த பொழுது தற்கொலைப் படை அணி ஒன்றிற்குத் தலைமை தாங்கிச் சென்று அவர்களை மீட்டுவர, பிரபாகரன் முயற்சித்தார். ஆனால் அது பல்வேறு காரணிகளால் தவிர்க்கப்பட்டு விட்டது என்பது குறிப்பிடத் தக்கது.

பின்னர் ''ஒப்பரேசன் லிபரேசன்'' என்ற பெயருடைய இராணுவ நடவடிக்கை மூலம் வடமராட்சிப் பகுதியைக் கைப்பற்றிய சிங்களப் படைகள் வெற்றிக் களிப்பில் ஆழ்ந்தன. இதன் மூலம் சிங்கள இராணுவத்திற்கு உளவியல் ரீதியான போரிடும் ஆற்றல் திடீர் எனக் கூடியது. சிறிலங்கா அரசும், புலிகளை அழித்து விடலாம் என திமிருடன் சிந்திக்கத் தொடங்கியது.

இதேசமயம் அந்த இராணுவ நடவடிக்கை காரணமாக பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்து மற்றைய பகுதிகளுக்குச் சென்றதுடன், அந்தத் திடீர் நடவடிக்கையால் மக்கள் குழம்பியும் போராட்ட வெற்றியில் நம்பிக்கை இழக்கக்கூடிய சூழலும் தோன்றியது.

இந்தச் சூழ்நிலைகளில்




தான் ஒரு கரும்புலித் தாக்குதலை நடாத்த தலைவர் பிரபாகரன் முடிவெடுத்து அதற்கான ஆயுதங்களைச் செய்தார்.

1987ஆம் ஆண்டு ஆடி மாதம் 5ஆம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த சிங்கள இராணுவ முகாமிற்குள் முதலாவது கரும்புலி புகுந்து அம் முகாமைச் சின்னாபின்னமாக்கியது.

சிங்கள அரசையும் அதன் இராணுவ இயந்திரத்தையும் கிலிகொள்ளச் செய்த அந்த முதலாவது கரும்புலித் தாக்குதலை கரும்புலி கப்டன் மில்லர் செய்து முடித்தான்.

அன்றிலிருந்து இன்றுவரை பல கரும்புலித் தாக்குதல்களை நிகழ்த்தி விட்டோம். அதில் பல கரும்புலிகள் வீரச் சாவு அடைந்துள்ளனர்.

ஒவ்வொரு விடுதலைப் புலி வீரனும், வீராங்கனையும் சாவைச் சந்திக்கத் தயாரான நிலையில் தான் இருக்கின்றார்கள். ஆனால் தங்களுடைய சாவு எப்போது வரும் என்பது அவர்களுக்குத் தெரியாது.

போர்க்களத்திற்கு செல்

(7ஆம் பக்கம் பார்க்க)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளைநூலகம்.

# தியாகத்தின் சி

## கரும்பு



கரும்புலி
கப்டன் மில்லர்
(வல்லிபுரம் வசந்தன்)



கரும்புலி
லெப். கேணல் போர்க்
(மா. அரசரத்தினம்)



கடற்கரும்புலி
கப்டன் கொலின்ஸ்
(பர்ணாந்து சில்வெஸ்டர்)



கரும்புலி
மேஜர் டாம்போ
(காசிப்பிள்ளை தயாபரன்)



கடற்கரும்புலி
கப்டன் ஜெயந்தன்
(சம்புக்குட்டி பத்மநாதன்)



கடற்கரும்பு
கப்டன் சிது
(பெரியதம்பி சந்











கடற்கரும்புலி
**கப்டன் மணியரசன்**
(வேதநாயகம் ராஜரூபன்)



கடற்கரும்புலி
**மேஜர் கணேஸ்**
(நாகநாதி ஜீவநேசன்)



கடற்கரும்புலி
**மேஜர் குமணன்-கோபி**
(சுப்பிரமணியம் செல்வலிங்கம்)



**மேஜர் தொண்டைமான்**
(கண்ணப்பர் நல்லதம்பி)



**கப்டன் ஐயனார்**
(செல்வநாயகம் ராசசேகரம்)



**கப்டன் சீராளன்**
(ஞானப்பிரகாசம் குணம்)



**கப்டன் செந்தமிழ்நம்பி**
(செல்லத்துரை ஜெகன்)



**லெப். ஜீவரஞ்சன்**
(கிருஸ்ணபிள்ளை முருகுப்பிள்ளை)

# ... சிகரங்களான
# ...புலிகள்



கடற்கரும்புலி
மேஜர் காந்தரூபன்
யோகராசா கோணேஸ்வரன்



கடற்கரும்புலி
கப்டன் வினோத்
(வேலுப்பிள்ளை திலகராசா)



கடற்கரும்புலி
...ன் சிதம்பரம்
(...பதம்பி சந்திரன்)



கடற்கரும்புலி
மேஜர் நிலவன்-வரதன்
(கந்தசாமி இராமச்சந்திரன்)



கடற்கரும்புலி
கப்டன் மதன்
(சீனிவாசகம் சிவகுமார்)



கடற்கரும்புலி மேஜர்
புகழரசன்-புவீந்திரன்
(சுப்பிரமணியம் நாககீதன்)









ான்



மேஜர் கலையழகன்
(பொன்னையா பேரின்பராசா)



கப்டன் சிவலோகன்
(சின்னத்தம்பி அருளானந்தம்)



கப்டன் மதிநிலவன்
(கணபதிப்பிள்ளை தவ ராசா)



கப்டன் கரிகாலன்
(இரத்தினசிங்கம் பிரபாகரன்)

ண்
ாளை)



லெப்ரினனன்ட் வீரமணி
(தெய்வேந்திரம் சுதாகர்)



லெப். நல்லதம்பி
(தங்கராசா கோகுலநாதன்)



லெப். செங்கண்ணன்
(செந்தூர்பாண்டியன்)



லெப். கண்ணன்
(நவரட்ணம் நேசகுலேந்திரன்)

(சி9738)

**வட பிராந்திய ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்**

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் இணை நூலகம்.



# கரும்புலிகள்

# அபூர்வ பிறவிகள்



கரும்புலிகள் வித்தியாசமானவர்கள் அபூர்வமான பிறவிகள், இரும்புபோன்ற உறுதியும், பஞ்சுபோன்ற நெஞ்சமும் கொண்டவர்கள். தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தைக் காணும் ஆழமான மக்கள் நேயம் படைத்தவர்கள்.

-தமிழீழ தேசியத் தலைவர்-

மருந்து - பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது
இல. 484, கேணல் கிட்டு சாலை, யாழ்ப்பாணம்.

சஞ்சீவகரணி மருந்தகம்
பிரதான வீதி, சித்தங்கேணி.

மருந்து - பால்மா வகைகள் (தனியார்) வரைவுள்ளது
ஊறணி - வல்வெட்டித்துறை.

மூலிகை மருந்தகம்
பிரதான வீதி, வட்டுக்கோட்டை.

**வில்லியம் ஓராவே தனியார் மருத்துவமனை**

இல. 17, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-9737)

**பற்சிகிச்சை நிலையமும் வைத்திய ஆலோசனைகளும்**

இல. 484, கேணல் கிட்டு சாலை, யாழ்ப்பாணம்.

# இலட்சியத்தில் இரும்பு மனிதர்கள்

அழகு மாணிக்கங்களாய் அல்ல: அத்திவாரக் கற்களாய்

ஆதிக்கப் புயலின் ஆவேச நடனம் தென்றலின் தழுவலில் அதிரும் அகிலம்
விரிந்த சிறகின் விரைந்த அசைவு தமிழீழம் சிரிக்க காவியம் பிறக்கும்

## சிறப்பு அங்காடி வர்த்தகர்கள்

முருகுந்தா ஆடை அகம்
இல. 2, சிறப்பு அங்காடி
யாழ்ப்பாணம்.

ராசி பட்டுச் சோலை
70, 71 A, சிறப்பு அங்காடி
(நவீன சந்தை) யாழ்ப்பாணம்.

திருப்பதி ஆடை அகம்
33, சிறப்பு அங்காடி
யாழ்ப்பாணம்.

கண்ணன் அழகு மாடம்
72, சிறப்பு அங்காடி
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

சிறி நந்தி ஆடை அகம்
இல, 3 சிறப்பு அங்காடி
யாழ்ப்பாணம்.

அங்கலின் ரெக்ஸ்ரைல்
43, சிறப்பு அங்காடி
யாழ்ப்பாணம்.

கோபிராஜ் ஆடை அகம
(ராகமாலிகா)
இல. 4, சிறப்பு அங்காடி
யாழ்ப்பாணம்.

கிருஷிகா ஆடை அகம்
69A, சிறப்பு அங்காடி (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

சுகுணாஸ் புடவை மாளிகை
29, சிறப்பு அங்காடி (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

வின்சன் புடவை அகம்
இல, 1 சிறப்பு அங்காடி (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

(சி-9750)

சிந்தனைக்கு..

இன்பம் எய்துவதற்கு ஒரு வழி உண்டு. அதுதான் உலகிற்கும் - குறிப்பாக தாய்நாட்டிற்கும் பயன்படுவது.
- நிக்கலாய் கராமிசின்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 05-07-94
தொலைபேசி:
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

# போற்றுதலுக்குரிய மண்ணின் மைந்தர்கள்

ஜூலை-05 கரும்புலிகள் நாள். 1987ஆம் ஆண்டு இந்நாளில்தான் விடுதலைப் புலிகள் இயக்கம் முதற் கரும்புலித் தாக்குதலை நடத்தியது. இதன் பின்னர், தரையிலும் கடலிலும் என கரும்புலிகள் நடத்திய தாக்குதல்கள் பல.

இக்கரும்புலிகள் மக்களுக்காக தமது சாவை தம் மடியிலேயே சுமந்து சென்ற உன்னத புருஷர்கள். இவர்கள் தமது மண்ணிற்காகவும், மக்களுக்காகவும் செய்த அர்ப்பணிப்புக்கள் ஒப்புவமை அற்றவை. மரணத்தை வென்ற இம்மாவீரர்கள் வணக்கத்திற்குரியவர்கள். தமிழினம் உள்ளவரை போற்றப்பட வேண்டியவர்கள்.

தலைவர் பிரபாகரன், ''கரும்புலிகள் பயத்தின் வேர்களைப் பிடுங்கி எறிந்தவர்கள். சாவு அவர்களிடம் சரணடைந்து விடுகின்றது. மரணத்தின் நாளை அவர்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். சாவு பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. தம்மை அழிக்கும் இறுதிக் கணத்திலும் தமது இலக்கை அழிக்கும் நோக்கிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பவர்கள் - இலட்சிய உறுதியில் இவர்கள் இரும்பு மனிதர்கள்'' என கரும்புலிகள் பற்றிக் குறிப்பிட்டமை முற்றிலும் பொருத்தப்பாடு உடையதாகும்.

விடுதலைப் புலிகளின் போராட்ட வடிவம் உலகிலேயே தனித்துவமானது. உலக இராணுவ ஆய்வாளர்களின் பகுப்பாய்விற்கும் அப்பாற்பட்டது. இதனை விடுதலைப் புலிகளுடன் போரிட்ட எதிர்த்தரப்பினரும் ஒப்புக் கொண்டுள்ளனர். அவர்களில் சிலர் வெளிப்படையாகவும், பலர் மனத்தளவிலும் விடுதலைப் புலிகளின்

# கிழக்கில் தேர்தலை தடுக்க வடக்கிலிருந்து புலிகள் விரைவு

## ராணுவ அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெற திட்டமிடப்பட்டுள்ள பொதுத் தேர்தலைத் தடுக்க வடக்கிலிருந்து விடுதலைப் புலிகளின் பல அணிகள் கிழக்கிற்குச்சென்று கொண்டிருப்பதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி ''லங்கா தீப'' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது

இப்பகுதிக்கு அதிவேக படகுகள் மூலம் வந்து சேர்ந்திருக்கும் சில அணிகள் தற்போது சிறுசிறு குழுக்களாக தொப்பிக்கல, ஏறாவூர் கொக்கட்டிச்சோலை போன்றபகுதிகளில் நடமாடுவதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவிக்கிறது.

# விசாரணைக்குழு அமைக்கும்வரை ஐ.தே.கவுடன் தொடர்பு இல்லை

## - பிரேமாவின் மகன் தெரிவிப்பு

(கொழும்பு)
தனது தந்தையார் கொலை தொடர்பாக ஏற்பட்டுள்ள சந்தேகங்களை தீர்க்கும்வகையில் ஒரு சுதந்திரமான விசாரணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டால் மட்டுமே ஐ தே க வுடன் தொடர்புடைய எந்த நடவடிக்கையையும் தான் மேற்கொள்ளப்போவதாகவும் இல்லாவிட்டால் ஐ. தே. க. வுடனான தொடர்புகளை தானும் தாயாரும் துண்டித்துக்கொள்ளப் போவதாகவும் முன்னாள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் மகன் சஜித் பிரேமதாசா தெரிவித்துள்ளார்.

நேற்று வெளியிட்ட அறிக்கையொன்றில் மேற்படி தகவலை தெரிவித்துள்ளார். தனது தந்தையாரின் கொலை தொடர்பாக ஏற்பட்டுள்ள சந்தேகங்கள் தீர்த்து வைக்கப்படாத நிலையில் அந்தக் கட்சியுடன் எவ்வாறு தொடர்பு கொள்ளமுடியும் என்றும் இது தனது தந்தையின் நற்பெயருக்கு மாசு ஏற்படுத்தும் செயல் என குடும்பத்தினர் தீர்மானித்து உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனவே தானோ தனது தாய் ஹேமா பிரேமதாசாவோ ஐ. தே. க. சார்பில் எந்தத்தேர்தல்தொகுதியிலும் போட்டியிடப்போவதில்லை என்றும் தனக்கு வழங்கப்பட்ட செயற்குழு உறுப்பினர் பதவியைக் கூட ஏற்கப்போவதில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

# ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் பட்டியல் தயார்

(கொழும்பு)
ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் பட்டியல்கள் யாவும் தயார் நிலையில் இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைக் காரியாலய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இன்னும் ஓரிரு தினங்களில் மாவட்ட அடிப்படையில் இவை தாக்கல் செய்யப்படும் என்றும் எனினும் ஒரு சில மாவட்டங்களில் மட்டுமே வேட்பாளர் தொடர்பாக இறுதி முடிவுகள் எடுக்கப்படவில்லை எனவும் மேலும் அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# வெடிக்காத எறிகணையை எறிந்த சிறுவன் காயம்

மன்னார் மாவட்டம்பெரிய குஞ்சுக்குளம்பகுதியில் கிடந்த வெடிக்காத ஷெல் ஒன்றை சிறுவனொருவன் எடுத்து எறிந்த போது அது வெடித்தமையால் இருவர் காயமடைந்தனர். வீட்டுக்குச் சமீபமாகக் கிடந்த அவ் வெடிக்காத ஷெல்லை வி அமலன் என்னும் எட்டு வயது சிறுவனொருவன் எடுத்ததைக் கண்ட இச்சிறுவனின் பெரிய தாயாரான திருமதி அ. செபமாலை (41 வயது) அதனை எறியும்படி கூறவே அச்சிறுவனும் எறிந்ததாகவும், அது மரத்தில் பட்டு வெடித்ததாகவும், அதனால் இவ்விருவரும் காயமுற்றதாகவும் கூறப்படுகிறது. காயமுற்ற இவ்விருவரும் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். இப்பகுதிக்கு சுமார் மூன்று

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1994 07-05
செவ்வாய் இரவு

08. 01- கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சி 'கரும்புலி நாள் தந்த கரும்புலி மாவீரன் கப்டன் மில்லர்''
08. 30 - செய்திகள்
08. 40- கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு சிறப்பு நிகழ்ச்சி - பாடல்கள்
08. 50- களமும் கானமும் ''தடைகள் அழிக்க தம்மைக் கொடுத்தவர்''

1994- 07- 06
புதன் காலை

07. 02 - மாவீரவணக்கம்

### சர்வதேச

கரும்புலிகள் தினத்தையொட்டி இன்று விடுதலைப் புலிகள் கொழும்பில் இராணுவ இலக்குகள் மீது தாக்குதல் நடத்தலாம் என இராணுவ புலனாய்வாளர்கள் எச்சரித்ததையடுத்து அங்குள்ள சகல படைநிலைகளும் உசார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன

# இரு போராளிகள் வீரச்சாவு



லெப்.கூத்தரசன்
(பூநகரி)



லெப்.கோவிந்தன்

பூநகரிப் பகுதியில் கடந்த 28ஆம் திகதி சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர் மோதலில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் கூத்தரசன் (விஜயபாலன் ஜீவராசா - 3-ம் பிளக் தரும புரம் கிளிநொச்சி -முன்னைய இடம்; திருகோணமலை) இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைச் செலுத்திக் கொள்கின்றனர்.

பூநகரிப் பகுதியில் கடந்த இரண்டாம் திகதி இரவு 10. 45 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற திடீர் மோதலின் போது போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் கோவிந்தன்(சரவணமுத்து மதியழகன் - கோவில் புளியங்குளம் வவுனியா) இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைச் செலுத்திக்கொள்கின்றனர்.

# மேலும் இரு மீனவர் கடற்படையால் கைது

(வடமராட்சி)
வடமராட்சிக் கடலில் வைத்து மேலும் இரண்டு அப்பாவி மீனவர்களை சிறிலங்கா கடற்படையினர் பிடித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று காலை 6-00 மணியளவில் பருத்தித்துறை கற்கோவளம் கடற்பகுதியில் வைத்து நடைபெற்றது.

கற்கோவளத்தைச் சேர்ந்த மீனவர்கள் இருவர் ஒருவள்ளத்தில் சென்று கற்கோவளம் கடற்பரப்பில்தொழில் செய்து கொண்டிருந்த வேளை கடற்படையினர் இவர்களை நெருங்கி துப்பாக்கி வேட்டின் மத்தியில் துரத்திப் பிடித்தனர். இவர்கள் தொழிலுக்கு பயன்படுத்திய வள்ளம் வலைகளையும் தம்முடன் எடுத்துச் சென்றனர்.

பாலசூரியமூர்த்தி இராமகிருஷ்ணன் (வயது 22) என்பவரும் ஐயாம்பிள்ளை இராசரத்தினம் (வயது 31) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையான குடும்பத்தலைவரையும் பிடித்துச் சென்றுள்ளனர். அடுத்தடுத்து மீனவர்கள் கைது செய்யப்பட்டு வருவதையிட்டு மீனவர்கள் மத்தியில் பீதி நிலவி வருகிறது.
(பே.)

# நல்லெண்ணக் குழு யாழ். வந்துள்ளது

(நமது நிருபர்)
அமெரிக்க மற்றும் இந்தியாவைச் சேர்ந்த நல்லெண்ணக் குழுவொன்று யாழ்ப்பாணம் வந்துள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த பத்திரிகையாளர்களும், பேசு

மேலும் எதிர்வரும் ஏழாம் திகதி நாலாம் குறுக்குத்தெருவில் இயங்கும் நற்சமூக நடுநிலையத்தில் மாலை 4 மணிக்கு இக் குழுவினர் யாழ். குடா நாட்டு மக்களைச் சந்தித்து அவர்களது பிரச்சினை

கொண்டுள்ளனர். அவர்களால் சிலர் ... வும், பலர் மனத்தளவிலும் விடுதலைப் புலிகளின் செயற்திறன், அர்ப்பணிப்பு என்பனவற்றை வியந்துள்ளனர். ஆனால் இதனை அவர்களால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. மலைத்து நிற்கின்றனர். அதிலும் கரும்புலிகளின் அர்ப்பணிப்பு பற்றி அவர்களால் சிந்தித்துப் பார்க்கவே முடியவில்லை. தமது சாவின் தன்மையையும், நேரத்தையும் தாமே நிச்சயிக்கும், அவர்கள் துணிவு, மனோபலம் என்பன அவர்களின் சிந்தனைக்கு அப்பாற்பட்டே உள்ளது. பலர் இவர்களுக்கான இம்மனோபலம் எங்கிருந்து கிடைக்கின்றது என்பதைக் கண்டறிவதில் பெரும் ஆவலாய் உள்ளனர்.

ஆனால், கரும்புலிகளின் இவ் அதிஉன்னத தியாகத்தை அந்நியர்கள் எவரினாலும் புரிந்து கொள்ள முடியாது. இதனை அடைவதற்கு மரணத்தை விஞ்சும் ஆன்மீக பலமும், மனோதிடமும் தேவை. கரும்புலித் தாக்குதல் என்பது தனியாக மரணத்தை அணைக்கும் செயலல்ல. ஒரு இலட்சியவாதியின் உன்னத பயணம். இது இந்த மண்ணிற்கே உரியது. இந்த மண்ணின் மைந்தர்களுக்கே உரிய தனித்துவமானது.

இக்கரும்புலிகள் இலங்கையின் அரசியல், இராணுவ வரலாற்றையே திசை திருப்பியவர்கள். நெல்லியடி இராணுவ முகாமைத் தகர்த்ததில் இருந்து, பலாலி முப்படைக் கூட்டுத் தளத்தினுள் ஊடுருவியதில் இருந்து அவர்கள் நடத்திய ஒவ்வொரு தாக்குதலும் சிறிலங்காவின் இராணுவ வரலாற்றில் துயர்படிந்த அத்தியாயங்கள் இதன் எதிரொலியே; இன்று கொழும்பில், தமது இராணுவ மையங்களைக் காப்பாற்ற முடியுமா? என்று சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை அஞ்சி நடுங்கச் செய்யும் அளவிற்கு கொண்டு வந்துள்ளது.

இதேசமயம், கரும்புலிகளின் இம் மகத்தான சாதனையானது தனியாகத் தரைப்பரப்பில் மட்டும் விரியவில்லை, கடற்பரப்பிலும் விரிந்து சென்றுள்ளது. இதன் பலாபலன் சிறிலங்கா கடற்படையின் சுதந்திரமான நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தியுள்ளதோடு, தமிழீழக் கடற்பரப்பின் ஒரு பகுதியையும் விடுவித்துள்ளது. அத்தோடு கடற்பிரதேசத்தில் கடற்புலிகளின் பலத்தையும் அதிகரித்துமுள்ளது.

கரும்புலிகளின் மகத்தான தியாகங்கள் சிறிய எண்ணிக்கையான பலவீனமான எமது மக்களின் பலம் பொருந்திய ஒரு பேராயுதம் என்பதில் ஐயத்திற்கே இடமில்லை. ''கரும் புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள், எமது போராட்டப் பாதையின் தடை நீக்கிகள். எதிரியின் படைபலத்தை மனபலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள்'' என்ற தலைவர் பிரபாகரனின் கூற்றுக்கள் யதார்த்தமானவை.

---

புதிய காலை

07.02 - மாவீரவணக்கம்
07.15 - நீங்கள் கேட்டவை
07.30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

---

றன

## இன்று

மாணவர்கள், அரச-தனியார் காரியாலய ஊழியர்கள் என பல தரப்பினரும் ஆயிரக் கணக்கில் கலந்து கொள்ளவுள்ளனர். (தி)

---

கக சேர்க்கப்பட்டுள்ளனர். இப்பகுதிக்கு சுமார் மூன்று மாதங்களுக்கு முன்னர் தந்திரிமலைமுகாமிலிருந்து இராணுவத்தினர் வந்து திரும்பியது குறிப்பிடத்தக்கது

---

## தமிழ் தேசிய

லும் போதுகூட திரும்பி வருவேன் என்ற நம்பிக்கையுடன் தான் ஒரு புலிவீரன் செல்கிறான். சில வேளைகளில் அங்கே அவன் சாவைச் சந்திக்கலாம் அல்லது திரும்பி வரலாம்.

ஆனால் கரும்புலிகள் நிலை வேறுபட்டது களம் புகுவதற்கு பல நாட்களுக்கு முன்னரேயே தங்களது சாவைத் தெரிந்து கொண்டு விடுகின்றார்கள். அடுத்த நிமிடத்தில் சாகப் போகின்றேன் என்ற உண்மையைப் பூரணமாகத் தெரிந்து கொண்டுவிடுகிறார்கள். அடுத்தநிமிடத்தில் சாகப் போகின்றேன் என்ற உண்மையைப் பூரணமாகத் தெரிந்துகொண்டுதான் கரும்புலிகள் வெடிமருந்தைத் தங்களுடன் கொண்டு செல்கின்றார்கள்.

இராணுவ முகாமிற்குள் இருக்கும் பல நூறு எதிரிகளின் கரங்களிலிருந்து முழங்கிக் கொண்டிருக்கும் துப்பாக்கிகளைக் கருத்திலெடுக்காது உடைந்துநொருங்கிப் போய்கிடக்கும்பாதைவழியே சீராக - நிதானமாக வெடிமருந்து வண்டியை ஓட்டிச் சென்று, எதிரி முகாமின் இதயத்திற்குள்ளே புகுந்து தன்னையும் சேர்த்து வெடிக்கச் செய்வதென்பது சாதாரண விடயமல்ல.

இயல்பாகவே அச்ச மூட்டும் அலைகளைக் கொண்ட அகண்ட சமுத்திரத்திற்குள் நடு இரவில், எதிரியின் நவீன காவற் கருவிகளையும் புத்தி சாதுரியமாக மீறி, வெடிமருந்துப் படகுடன் உட்புகுந்து எதிரியின் கப்பலை நெருங்கி, முன்னரே தீர்மானிக்கப்பட்ட இலக்கை இனம் காண்பதற்காக ஒரு முறை கப்பலைச் சுற்றி வந்து குறித்த இலக்கின் மீது மோதி) வெடிமருந்து படகுடன் சேர்ந்து வெடித்துச் சிதற ஒரு மனித மனம் உடன்படாது.

இவைகள் ஒரு சாதாரண வீரனால் செய்யப்பட முடியாதவை. இதைச் செய்வதற்கென்றொரு ஆன்மீக பலம் தேவை. தன்னை அழித்துக் கொள்ளத் தயாரான மனோதிடம் தேவை. தனது இறுதி நேரத்திலும் கூட பதற்றமின்றி, உறுதியுடன், குறி பிசகாது எதிரியைத் தேடி ஓடும் வீரம் தேவை. விரக்திகாரணமாகவோ, முட்டாள் தனமாகவோ, தன்னை அழித்துக் கொள்ள முனையும் தற்கொலை முயற்சியைப் போலல்ல இது. அல்லது எதிரியின் கண்ணோட்டத்தின் படி கொடூரம் மிக்கதும் மானிட இனமாக இல்லாததுமான ஒரு பூதம் அல்ல இது; அடிமைப் பட்டுக் கிடக்கும் ஒரு தேசிய இயக்க சக்திக்கு உந்துவிசையாக விளங்கும் உயரிய போர் வடிவம் தான் எங்களது கரும்புலிகள்.

உலகின் எந்த ஆயுதங்களாலும் வெற்றி கொள்ளப்பட முடியாததும், உலகின் எந்தத் தொழில் நுட்பத்தாலும் தடுக்க முடியாததும் உலகின் எந்த அரச இயந்திரத்தாலும் அடக்க முடியாததும் தான் எங்களது கரும்புலிகள் மனோபலம்.

இந்த மனோபலம் ஒரு வீர உணர்வை வெளிப்படுத்தும் ஒரு குறியீடு மட்டுமல்ல, எமது சமுதாய எண்ணவோட்டத்தில் பிரளயத்தை ஏற்படுத்தப் போகும் சக்தி கொண்ட ஒரு மாபெரும் அரசியல் வடிவமுமாகும்.

ஒவ்வொரு கரும்புலியும் தனது உயிரைப் போக்கிக் கொள்ளும் போது நிகழும் பூகம்பம், தமிழீழ விடுதலைப் போராட்டச் சக்கரத்தை முன்னோக்கித்தள்ளி விடுவதுடன் வீரம்மிக்க, யாருக்கும் அடிபணியாத, அடக்கநினைப்பவரை நடுங்க வைக்கும் ஆற்றல் கொண்ட, தமிழ் சமூகத்திற்குத் தேவையான உணர்வை ஊட்டி விடுகின்றது.

தேச பக்தியையும், வீர உணர்வையும் அடித்தளமாகக் கொண்ட இத்தகைய மனோபலம் எமது மக்களிடம் இருக்குமாக இருந்தால், உலகில் எவராலும் எம்மை எதுவும் செய்ய முடியாததுடன், சுதந்திரத்துடனும் கௌரவத்துடனும் வாழும் பலத்தையும் நாம் பெற்றுக் கொள்ளமுடியும்.

இன்று பல நூற்றுக்கணக்கான புலி வீரர்கள் தங்களைக் கரும்புலி அணியில் இணைத்துக் கொண்டிருக்கின்றனர், ஒவ்வொரு முறையும் கரும்புலித்தாக்குதலுக்கான திட்டம் தீட்டப்படும்போது தன்னைத் தான் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று ஒவ்வொரு வீரனும் வீராங்கனையும்முண்டியடிக்கின்றார்கள்.

அலையலையாக கரும்புலித் தாக்குதலுக்குத் தயாராகும் இந்தத்தியாகச் செயலை, உலகில் எங்குமேகாண முடியாது இது உலக அதிசயங்களில் புதியதொன்றாகும்.

களம் புகும் கரும்புலிகளின் பிரமிப்பூட்டும் வீரசாதனைகள், சிங்கள ஆளும் வர்க்கத்திற்குக் கிலியை உண்டு பண்ணுகின்ற அதேசமயம், அந்த உன்னதமான அர்ப்பண உணர்வு ஏற்படுத்தும் சமூகத்தாக்கம், தமிழீழ குடிமக்களின் மனதில் இருக்கும் சுதந்திர ஒளியை இன்னும் வளர்த்துச் செல்லும் என்பது உறுதி.

**நன்றி:- விடுதலைப் புலிகள்-ஆனி 1993**

---

வந்துள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த பத்திரிகையாளர்களும், யேசு சபையைச் சேர்ந்த இந்திய குருக்களுமே இந்த நல்லெண்ணக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இலங்கைத் தமிழ் அகதிகளைப் பராமரிக்கும் சேவைகளுக்குப் பொறுப்பான இக்குழுவினர் ஐந்து தினங்கள் இங்கு தங்கியிருப்பர். இக்காலப் பகுதியில் இங்குள்ள அனைத்து அகதி முகாம்களையும் இவர்கள் சென்றுபார்வையிட்டு அவர்களின் நிலைப்பாட்டினைத் தெரிந்து கொள்ளவிருப்பதுடன் இங்குள்ள நிலைமைகளையும் நேரில் அவதானிக்கவுள்ளனர். அத்துடன் இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட இடங்களையும் சென்று பார்வையிடவும் இவர்கள் திட்டமிட்டுள்ளனர்.

---

## கொழும்பு

டுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் பல கரும்புலிகள் கொழும்பில் உள்ளதாகவும் இரண்டு வானில் வெடிகுண்டுகள் பொருத்தப்பட்டிருந்ததாகவும் இதில் ஒன்றே கடந்த வாரம் கொட்டாஞ்சேனை பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட வான் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்பொழுது வெடிகுண்டுடன் நடமாடும்வான்வெள்ளை நிறம் கொண்டதெனவும் அது கொழும்பில் எங்கோ ஓர் இடத்தில் மறைத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந் நிலையில் தொடர்ந்து கொழும்பில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதோடு பெரும் வீதிச் சோதனைகளும் இடம்பெற்று வருகின்றன.

---

## கருப்புலிகள்

அச்சுவேலி, உடுப்பிட்டி, வல்வெட்டித்துறையை அடைந்து அங்கிருந்து கடற்கரை வீதியூடாக பருத்தித்துறையை அடைந்து அங்கிருந்து மந்திகை மாலிச்சந்தியூடாக நெல்லியடியைச் சென்றடையவுள்ளது.

---

கு இக் குழுவினர் யாழ். குடா நாட்டு மக்களைச் சந்தித்து அவர்களது பிரச்சினைகள் குறித்து அறிந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது பொது மக்கள் அவர்களை சந்தித்து தங்கள் நிலைமைகளை விளக்கலாம் என அதன் இயக்குநர் அருட்திரு எஸ் கே. இம்மனுவல் தெரிவித்துள்ளார்.

---

## 'உயிராயுதம்'

நிதர்சனத்தினரால் வெளியிடப்பட்ட ''உயிராயுதம்'' ஒளிநாடா (கரும்புலிகளின் நேர் காணல் - உரையாடல்) கலை ஊடக இணையத்தின் சகல வீடியோ நாடா விநியோகஸ்தர்களும் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம்.

---

## விமானப்படை

கதிர்காமர் உட்பட பலர் ஒன்று சேர்ந்து இவ் ஆட்சேபத்தை தெரிவித்தனர்

இவர்களது கோரிக்கையை ஏற்க விமானப்படைத் தளபதி உடனடியாக மறுத்து விட்டார்.

எனினும் குண்டு கண்டுபிடிக்கப்பட்ட விடயம் அறிந்ததும் தான் உலங்கு வானூர்தி மூலம் சென்று ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவைச்சந்தித்து இதுபற்றி விளக்கியதாகவும் தலைமை அலுவலகத்தை மாற்ற அவர் சம்மதம் தெரிவித்ததாகவும் விமானப்படைத்தளபதி தெரிவித்தார்.

விமானப்படை தலைமை அலுவலகத்தை கோட்டைக்கு மாற்றக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்

இதேவேளை ஐ. நா. அபிவிருத்தித்திட்ட கொழும்பு வதிவிட பிரதிநிதி றொபெட் இஸ்லாண்ட் இது குறித்து இராஜதந்திர ரீதியிலும் நெருக்குதலை கொடுத்து வருவதாக தெரியவருகிறது. இவ்விடயம் குறித்து அவர் வெளிவிவகார அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீட்டை சந்திக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## ருமேனியா, சுவீடன் கால் இறுதிக்கு தெரிவு

(வாஷிங்டன்)

உலகக் கோப்பை உதைபந்தாட்டப் போட்டியின் இரண்டாவது சுற்று ஆட்டங்களில் நேற்று முன்தினம் ஆர்ஜென்டினாவுக்கும் ருமேனியாவிற்கும் இடையில் நடைபெற்ற விறுவிறுப்பான போட்டியில் ருமேனியா ஆர்ஜென்டினாவை 3 : 2 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து கால் இறுதி போட்டிக்கு தெரிவானது. இந்த ஆட்டத்தில் ஆர்ஜென்டினா அணித் தலைவர் மரடோனா கலந்து கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த வருட இறுதியாட்டத்தில் ஆர்ஜென்டினா விளையாடியது தெரிந்ததே.

சுவீடனுக்கும் சவூதிஅரேபியாவிற்கும் இடையிலான போட்டியில் சுவீடன் 3 : 1 என்ற கோல் கணக்கில் சவூதி அரேபியாவை தோற்கடித்து கால் இறுதி போட்டிக்கு தெரிவானது.

### 'யார் இவர்கள்?' முதலிடம் பெற்றது

(யாழ்ப்பாணம்)

மாவட்ட மட்டத்தில் கடந்த 17 ஆம் திகதி நடைபெற்ற தமிழ்மொழித்திறன் போட்டியில் நவீன நாடகம் பிரிவு மூன்றில் புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தின் 'யார் இவர்கள்?' என்ற நாடகம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது. இதே வேளை இந் நாடகம் கோட்ட வலயம் மட்டத்திலும் முதலாம் இடத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

### ஆகஸ்ட்

எனவும் இப் பரீட்சைக்கான சகல அனுமதி அட்டைகளும் இம் மாதம் 15ஆம் திகதிக்குள் வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## ருவாண்டா தலைநகர் கிளர்ச்சியாளர் வசம்

(கிகாலி)

ருவாண்டா தலைநகர் கிகாலியை அந்நாட்டு சிறுபான்மை டுட்சி இன கிளர்ச்சியாளர்கள் கடும் மோதலின் பின்னர் நேற்றுக்காலைகைப்பற்றினர் கிகாலி மீது கடந்த இரண்டு நாட்களாக ருவாண்டா தேசபக்த முன்னணி அமைப்பை சேர்ந்த கிளர்ச்சியாளர்கள் கடும் தாக்குதலை நடத்தி வந்தனர். பெரும்பான்மை ஹூட்டு இன அரச படைகள் நாட்டின் தென் பகுதியில் உள்ள தளங்களுக்கு பின்வாங்கி ஓடிவிட்டனர். இதே சமயம் கிளர்ச்சியாளர்கள் தொடர்ந்து மேற்கு நோக்கி முன்னேறினால் அதை தடுத்து நிறுத்துமாறு அங்குள்ள பிரெஞ்சு படைகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் இரவு முழுவதும் நடத்திய கடும் தாக்குதலை தொடர்ந்து கிளர்ச்சியாளர்கள் நேற்றுக் காலை தலைநகர் கிகாலிக்குள் நுழைந்தனர் ருவாண்டா பாதுகாப்பு அமைச்சு கட்டடத்தையும் கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளனர் அரச படைகளின் பிரதான தலைமையகமாக இது இருந்து வந்தது.

இதே சமயம் ருவாண்டாவின் தென் பகுதியில் பிரெஞ்சு படைகளின் நடவடிக்கைகளை கிளர்ச்சியாளர்கள் குழப்புவதாக வந்த செய்திகளை அவ் அமைப்பு மறுத்துள்ளது.

ருவாண்டாவில் டுட்சி சிறுபான்மையினருக்கும் ஹூட்டு பெரும்பான்மையினருக்கும் இடையே நீண்டகாலமாக இனக்கலகம் நடைபெற்று வந்தது தெரிந்ததே.

### தமிழ்த்தின விழா

(கொழும்புத்துறை)

யாழ். கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயத்தின் தமிழ்த்தினவிழா நாளை புதன்கிழமை காலை பத்து மணிக்கு வித்தியாலய பிரதான மண்டபத்தில் அதிபர் திருமதி பரிமளா அன்னலிங்கம் தலைமையில் இடம் பெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ் கோட்டம் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. அருளானந்தமும், யாழ். வலயம் ஆசிரிய ஆலோசகர் திரு. எஸ். சிறிதயாளனும், யாழ். கோட்டம் வி. பு மா. அமைப்பு சுடல் புலிகளைச் சேர்ந்த செல்வி ச. ஈழத்தரசியும் பங்குபற்றிச் சிறப்பிக்கவுள்ளனர். (24)

## பிரெஞ்சு படையுடன் மோதல் வெடித்தது

ருவாண்டாவில் பிரெஞ்சுப் படையினருக்கும் கிளர்ச்சியாளர்களுக்குமிடையே உக்கிர மோதல் இடம் பெற்று வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ருவாண்டாவில் கடந்த சில மாதங்களாக நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரில் இதுவரை ஐந்துலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் படுகொலை செய்யப்பட்டதுடன் பல லட்சக்கணக்கானோர் அகதிகளாக இடம் பெயர்ந்து வேறு இடங்களில் தஞ்சமடைந்துள்ளமையும் தெரிந்ததே.

இதனை காரணம் காட்டி ஐ. நா. சபையின் அனுமதியுடன் பிரான்ஸ் தனது ஆயிரக்கணக்கான இராணுவத்தினரை அகதிகளை காப்பதாகக் கூறி ருவாண்டாவிற்குள் அனுப்பி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

இப்பிரெஞ்சுப் படையினருக்கும் ருவாண்டா கிளர்ச்சியாளருக்குமிடையே நேற்று முன்தினம் முதல் இம்மோதல் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை ருவாண்டாவில் சண்டைநடக்கும் கிகாலி நகரிலிருந்து ஆயிரக் கணக்கான மக்கள் தொடர்ந்து வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள். தாங்கள் சுமந்து செல்லக்கூடிய பொருட்களை மட்டும் கையில் எடுத்துக் கொண்டு அவர்கள் வேறு இடங்களுக்குச் சென்று கொண்டிருக்கின்றனர்.

இதன்போது வெளியேறிக் கொண்டிருக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பிக் கொண்டிருக்கும் பிரெஞ்சு படையினருக்கும் கிளர்ச்சியாளருக்குமிடையே இம் மோதல் இடம்பெற்றதாம். பிரெஞ்சு படையினர் மனிதாபிமான உதவி பணியில் ஈடுபட்டுள்ளதாக பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

## முதலாமாண்டில்.....
### நெஞ்சில் நீங்கா நினைவலைகள்



| பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 08 | 16 |
| — | — |
| 09 | 07 |
| — | — |
| 1969 | 1993 |

கந்தையா கோபாலன்
[லெப். கோபால்]
திதி: 05-07-1994

வரிப்புலியாய்க் களமாடி
வாசமிகு தமிழ் காக்கச்
சரித்திரத்தில் அழியாத
சாதனைப் போர் நடத்தி நின்றாய்!
மண்டைதீ வில்லமர்ந்த
மாற்றாரின் படைவிலக்கத்
துணிவுடனே போர்தொடுத்துத்
துரையேநீ சென்றுவிட்டாய்!
நெஞ்சத்தில் நீங்காத
நினைவலைகள் நாம்சுமந்து
அஞ்சலித்தோம், கண்மணியே!
அமைதிகொள் தமிழ்வெல்லும்!

- குடும்பத்தவர்

## வெற்றிக்கிண்ணம் யாருக்கு

'94 உலகக் கிண்ண உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெறப் போகும் அணிகளை வரிசைக் கிரமமாகத் தெரிவு செய்து பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். ஒருவர் எத்தனை விண்ணப்பங்களையும் அனுப்பலாம். விண்ணப்பங்கள் பிரசுரமாகியுள்ள விண்ணப்பப்படிவத்தில் அனுப்பப்பட வேண்டும். பரிசு பெறுவோர் குலுக்கல் முறைமூலம் தெரிவு செய்யப்படுவர்.

| | | |
|---|---|---|
| முதலாம் | பரிசு | 500 ரூபா |
| இரண்டாம் | பரிசு | 300 ரூபா |
| மூன்றாம் | பரிசு | 200 ரூபா |

9-7-94 அன்று பிற்பகல் 4 மணிக்கு முன்னர் விண்ணப்பங்கள் தபால் மூலமோ அல்லது நேரிலோ கிடைக்கத்தக்கதாக அனுப்ப வேண்டும்.

முகவரி;
உலகக்கிண்ண உதைபந்தாட்டம் '94
ஈழநாதம் காரியாலயம்,


யூன் மாத அதிர்ஷ்டசாலிகள்

1-ம் பரிசு:- இல. 6212 திரு. அரவிந்தன், வட்டு மேற்கு. வட்டுக்கோட்டை,
2-ம் பரிசு:- இல. 6252 செல்வி லக்ஷ்மி குணபால ராசா 28/1 ராஜேந்திரா றோட், யாழ்ப்பாணம்,
3-ம் பரிசு:- இல. 6520 M. சுகுணா, 12 புது வீதி, ஈச்சமோட்டை

நீங்களும் அதிர்ஷ்டசாலிகள் ஆவதற்கு எம்மிடம் கொள்வனவு செய்யுங்கள்

"எழிலகம்"

லெப். இளங்கோ தெரு, யாழ்ப்பாணம்.

(சி-9754)



கரும்புலிகள் நாள் - யூலை 5

விரும்பிடும் சுதந்திரம்
விரைவினில் பெற்றிட
கரும்புலியாகினர்
களத்தினில் குதித்தனர்
நெருப்பினை சுமந்தனர்
நெருங்கினர் எதிரியை
பொடிப்பொடியாக்கினர்
புகழினை சூடினர்

யாழ் வணிகர் கழகம்
21, மேல் மாடி சிறப்பு அங்காடி
யாழ்ப்பாணம்.

(சி/ 9151)


## 45 ம் நாள் நினைவஞ்சலி



அமரர் திரு. வே. சின்னத்தம்பி
(தலைவர், நீர்வேலி ப.நோ.கூ. சங்கம்)

மகத்தான சேவைகளை மக்களுக்கு வழங்கி கூட்டுறவாளராகத் திகழ்ந்திட்ட வேளையில், 22.05.94 அன்று விமான குண்டுத் தாக்குதலினால், அகால

யாழ் ஸ்ரீதரில்
STEVENSPIEL BERG

- குடும்பத்தவர்
சங்கத்தானை,
சாவகச்சேரி. (8723)

ஈழநாதம் காரியாலயம்,
31, மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

STEVENSPIEL BERG
இயக்கிய
JURASSIC PARK
(அறிவியல் சார்ந்த திகில் படம்)
தினசரி 6.00
சனி, ஞாயிறு
10.30, 6.00மணி
(சி - 9872)

அன்று விமான குண்டுத் தாக்குதலினால், அகால மரணத்தைத் தழுவிக் கொண்ட 45-ம் நாளான இன்று தங்கள் ஆத்ம சாந்திக்காக எமது நீங்காத நினைவலைகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

பணிப்பாளர் சபை,
பணியாளர்கள், அங்கத்தவர்கள்,
சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்,
சாவகச்சேரி.
(சி-9741)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



அமரர் திரு. வே. சின்னத்தம்பி
(நீர்வேலி ப. நோ. கூ. ச. தலைவர்)
அமரர் செல்வி சி.சிவதர்சினி(மகள்)
(வேம்படி மகளிர் கல்லூரி மாணவி உயர்தரம் கணிதம்)
அமரர் செல்வி க. புஸ்பராணி
(மருமகள்)
(நீர்வேலி மத்தி)

ஆகியோருக்கு எமது அஞ்சலியைதெரிவிப்பதுடன், துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களை தெரிவித்துஅவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

தலைவர்,
பணிப்பாளர்,
பணியாளர்கள்
தெல்லிப்பளை பல நோ. கூ. சங்கம்
மானிப்பாய்

05.07.1994 (சி-9741)

## வெற்றிக் கிண்ணம் யாருக்கு?
உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டி '94

1-ம் இடம்: ....................
2-ம் இடம்: ....................
3-ம் இடம்: ....................
பெயர்: ....................
விலாசம்: ....................
கையொப்பம்: ....................

## யாழ் ஸ்ரீதரில்-

கரும்புலிகள் நாளையொட்டிய விசேட படக்காட்சியாக

இன்று மு. ப. 10. 30 மணிக்கு

### மே, ஒளிவீச்சு

நவீன ஆயுதங்களெல்லாம் தோற்றுப்போகும் இந்த உயிராயுதத்தின் முன்னால்.

தினசரி 4. 00 மணிக்கு

### உயிராயுதம்

இது தேசத்தை காத்த கருர்புலி வீரர்களின் காவியம்
இது நிச்சயம் உங்களை உரோமம்சிலிர்க்க வைக்கும்

மாலை 6. 00 மணிக் காட்சியாக

### தாயகக்கனவு

திரைப்படமும் காண்பிக்கப்படும்.

(சி-9752)

## கண்ணீர் அஞ்சலிகள்

எமது பாடசாலை வணிகத்துறை மாணவன் செல்வன் சு. சுதர்ஸன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி கற்பகம் சுந்தரலிங்கம் அவர்கள 03-07-1994இல் இயற்கையெய்தியதையிட்டுதுயருறும் அவர்களது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

95 வணிகத்துறை மாணவர்கள்,
யாழ்| நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம்.
(சி-9756)

## மரண அறிவித்தல்
### சதாசிவம் கஜேந்திரன்

பலாலியைச் சேர்ந்த சதாசிவம் கஜேந்திரன் (குழந்தை) மேஜர் தொண்டமான் (முன்னாள தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்க ஊழியர்) 30-06-94 இல் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார். இவர் சதாசிவம், தங்கம் அவர்களின் அன்புப் புதல்வரும் ஞானாம்பிகை (உதவி ஆசிரியை, கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை). கணேசமூர்த்தி (யாழ். பிரதம தபாலகம்), கணேசலிங்கம், யோகாம்பிகை, கமலாம்பிகை. சிறீகரன், ஜெயலட்சுமி, திருச்செந்தூரன் பாஸ்கரலிங்கம் ஆகியோரின் சகோதரனுமாவார். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துரைச்சாமியார் வளவு,
கோப்பாய் தெற்கு.
தகவல்:
கனகசபை சதாசிவம்
(8724)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 05 ஆம்திகதிஅச்சிட்டு வெளியிடப்பட்டது.